Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

மூரசு 1 13-1-1985 ஞாயிற்றுக்கிழமை (தைத்திங்கள் 29) முழக்கம் 172

பொதுநூலகம் யாழ்ப்பாணம்

வவுனியாவில் தந்தையும் மகனும் நேற்றிரவு சுட்டுக் கொலை!

(வவுனியா)

வவுனியாவிலுள்ள மணியர்குளம் என்ற இடத்தில் தந்தையும் மகனும் ஆயுதாணிகளால் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமது கடைக்குள் படுத்திருந்த மாதகலைச் சேர்ந்த வர்களான கணபதிப்பிள்ளை என்பவரும், அவரது மகனான கிருஷ்ண குமாருமே கொலை செய்யப்பட்டவர்கள். இரவு நேரம் வெளியில் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தபோது, ஆயுதங்கள் சகிதம் நின்ற கூட்டத்தினரால் இவர்கள் சுடப்பட்டனராம். பாதுகாப்பு நடவடிக்கைகளாக ஆயுதம் வழங்கப்பட்டவர்களே இதனைச் செய்ததாகக் கூற படுகின்றது.

பிடிபட்ட 7 இலங்கைக் கடற்படை வீரர்கள் மீது இந்திய இராணுவச் சட்டத்தின்கீழ் விசாரணை!

(சென்னை)

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து, தமிழக கடலோரக் காவற்படையினரால் துரத்திபிடிக்கப் பட்ட இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த எழுவரும் இந்திய ராணுவச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படவுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. இராமேஸ்வரத்தில் இருந்து பலத்த பாதுகாப்புடன் நேற்று மதுரைக்குக் கொண்டுசெல்லப் பட்ட இவர்கள் உயர் பொலிஸ் அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு வருவதாக யு. என் ஐ. செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் சுடப் பட்டதாகக் கூறப்படும் மூவரில் இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிடிபட்ட இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு தீவிர பாதுகாப்புடன் 'மண்டபம்' காம்ப்பில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்திய கடல் எல்லைக்குள் தமிழக ரோந்துக் கப்பல்களின் தொகை மேலும் அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

பயங்கரமான ஆயுதங்களோடு கலகம் செய்தது, பொது மக்களைத் தொழில் செய்ய விடாது காயப்படுத்தியது போன்றகுற்றச்சாட்டுக்கள் இந்திய குற்றச் சட்ட விதிகளின் கீழ் கைதானவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட விருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடலோரப் படையினர் கொடுத்த சமிக்ஞையினாலேயே தமது படகும் கடற்படையினரும் இந்தியக் கடல் எல்லைக்குள் சென்றிருக்கலாம் என்று இலங்கை அரசு தொடர்ந்து கூறிவருகின்றது.

ஈழத் தமிழர் கொலைகளை தடுக்க உதவுக! பார்த்தசாரதி - கூட்டணி பேச்சு

பிரதமர் ராஜீவை இன்று சந்திக்க ஏற்பாடு இலங்கைத் தூதரகம்முன் மாணவர் ரகளை

(புதுடில்லி)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் ஆகியோர் நேற்று புதுடில்லியில் பாரத அரசின் வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து, சுமார் எழுபது நிமிடங்களாக பேச்சு வார்த்தை நடத்தினர். சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் வாபஸ் பெறப்பட்டதையடுத்து தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் வன் செயல்கள் பற்றி விரிவாக எடுத்துவிளக்கினர்.

அங்கிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி பிரதமர் ராஜீவ் காந்தியை கூட்டணித் தலைவர்கள் இன்று சந்திக்கலாமெனத் தெரியவந்துள்ளது. நேற்றைய சந்திப்புப் பற்றி கூட்டணிச் செயலதிபர் திரு. அ அமிர்தலிங்கம் கருத்து வெளியிடுகையில் ஈழத்தமிழர் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய அதிகாரிகளிடம் தாங்கள் கேட்டிருப்பதாக தெரிவித்தார்.

கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் லண்டன் பி பி. ஸி நிருபருக்கு புதுடில்லியிலிருந்து நேற்று அளித்த பேட்டியொன்றில் இந்நாட்டுப்

—2-ம் பக்கம் பார்க்க

வடக்கில் ஐந்து பிரதான தபாலகங்கள் மூடப்பட்டன

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஐந்து பிரதான தபால் நிலையங்கள் தற்போது மூடப்பட்டுள்ளன. அடுத்தடுத்து இத்

பொங்கலுக்குப் பின்னர்...

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு தைப் பொங்கலை அடுத்து விடுதலை செய்யப்படுவார்கள் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி தம்மிடம் கூறியதாக யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் நேற்றிரவு தெரிவித்தார்.

—2-ம் பக்கம் பார்க்க

தபால் நிலையங்களில் இடம் பெற்ற கொள்ளை முயற்சிகளே இதற்குக் காரணமாகும்.

சாவகச்சேரி, கொடிகாமம், சுண்டுக்குளி, வண்ணார்பண்ணை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள ஐந்து தபாலகங்களுமே மூடப்பட்டன. இதனால் வானெலி, ரி. வி. லைசென்ஸ் எடுப்பதற்கு இப்பகுதி மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

அதேவேளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொள்ளையின் எதிரொலியாக யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையமும் நேற்று மூடப்பட்டுக் கிடந்தது. இதனால் மக்கள் முக்கிய கருமங்களை நிறைவேற்ற முடியாது தவித்தனர்.

"மாமி"க்கும் மரணதண்டனை

"மாமி" என அழைக்கப்படும் 47 வயதான விக்கினேஸ்வரி என்பவருக்கு நேற்று

—2-ம் பக்கம் பார்க்க

"இப்போது தீர்வுகாண்பது கடினம்": தொண்டமான்

இலங்கையில் இப்போது நிலவும் சூழ்நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியமாகாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் எஸ். தொண்டமான் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இலங்கையில் இடப்பெறும்

—2-ம் பக்கம் பார்க்க

கூட்டணி சார்பில் "ஆலால்" அறிக்கை

ஆடம்பரமின்றி எளிமையாக பொங்கலை அனுஷ்டிப்போம்

(இருபாலை)

இன்றைய பயங்கர நெருக்கடி நிலைமையான சூழ்நிலையில் வாழும் தமிழ் மக்கள் பாரம்பரிய முறையில் தைப் பொங்கலை கொண்டாட முடியாத சூழ்நிலையை உணர்ந்து, மிக எளிமையான முறையில் ஆடம்பரங்கள் எதுவுமின்றி

—2-ம் பக்கம் பார்க்க

ஆசிரிய நேர்முகப் பரீட்சை 21ம் திகதி தோற்றலாம்

(கொழும்பு)

கடந்த மாதம் 26ம், 27ம், 28ம் திகதிகளில் கொழும்பில் கல்வி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற ஆசிரியர்

—2-ம் பக்கம் பார்க்க

லலித் நேற்று திடீர் யாழ் விஜயம் விரைவில் சிங்கப்பூர், டில்லி பயணம்

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

விசேஷ விமானமொன்றில் யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் இங்குள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்து, உயர் அதிகாரிகளுடன் பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

அமைச்சர் கொழும்பு திரும்பும் வழியில் மன்னாருக்குச் சென்று அங்குள்ள ராணுவ அதிகாரிகளுடனும் மதஸ்தாபனங்களின் பிரமுகர்களுடனும் கலந்துரையாடியதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, அமைச்சர்

—2-ம் பக்கம் பார்க்க

ஈழமுரசு கலண்டர்

ஈழமுரசு நாளை முதல் நான்கு பக்கங்களில் வெளிவரும். நாளைய இதழுடன் ஈழமுரசு வழங்கும் இலவச கலண்டர் இணைக்கப் பட்டிருக்கும். தவறாது உங்கள் கலண்டரைப் பார்த்து வாங்குங்கள்.

ஒளிபரப்ப விரும்பவில்லை

நேற்றுமுன்தினம் கொழும்பில் தமிழ்ப் பகுதி பிரஜைகள்

2-ம் பக்கம் பார்க்க

கல்வியங்காடு சந்தையில் நேற்று இராணுவ சோதனை

(இருபாலை)

நேற்று நண்பகலளவில் கல்வியங்காடு சந்தைப் பகுதியைச் சுற்றிவளைத்த பாதுகாப்புப் படையினர் இப்பகுதியில் சிலரைக் கைது செய்து சென்றதாகத் தெரியவந்துள்ளது.

கல்வியங்காடு, செங்குந்தா வீதி, இராச வீதி ஆகிய இடங்களிலும் இவர்கள் சோதனை மேற்கொண்டனர். இங்குள்ள சட்டத்தரணி ஒருவரது

—2ம் பக்கம் பார்க்க

மட்டுநகரில் பிடிபட்டன

(மட்டுநகர்)

மட்டக்களப்பு விசேட பொலிஸ் படையினர் காரை

—2ம் பக்கம் பார்க்க

சுடுமுரசு

பல நாள் தேங்காய் திருடன் தென்னை மரத்துடன் கட்டப்பட்டார்

(சுண்டுக்குளி)

தென்னந்தோட்டமொன்றில் பல நாட்களாகத் தனது கைவரிசையைக் காட்டி வந்த தேங்காய்த் திருடனொருவர் கையும் மெய்யுமாகச் சிக்கிக் கொண்டார். சரசாலை தெற்கில் வெள்ளிக்கிழமை அதிகாலை இச்சம்பவம் நிகழ்ந்தது பல தினங்களாக இத்தென்னந் தோட்டத்தில், தேங்காய்த் திருட்டுத் தொடர்ந்து நடைபெற்று வந்ததையடுத்துத் தென்னந் தோட்ட உரிமையாளர் தென்னங்காணியில்மறைந்திருந்து கண்காணித்ததையடுத்தே திருட்டுநபர் சிக்கிக் கொண்டார். பிடிபட்ட திருட்டுநபர் தென்னை மரமொன்றுடன் கட்டிவைக்கப்பட்டதையடுத்துப் பொதுமக்கள் திரளாகக்கூடி வேடிக்கைபார்க்கத் தொடங்கிய போது அங்குவந்த தீவிரவாத இயக்கமொன்றைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டி வைக்கப்பட்டிருந்த நபரை விசாரணை செய்தபின் எச்சரித்து விடுவித்தனர்.

ஜனதிபதிக்கு 2500 அகதிகள் மகஜர்!

முல்லைத்தீவுப் பாடசாலைகளில் வசதி இல்லாது வாழும் 7447 தமிழ் அகதிகள்

"பயங்கரவாதத்துடன் எந்த வித தொடர்புமில்லாத ஏழை கிராம மக்களாகிய நாம், எமது சொந்த வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு இன்று அகதிகளாக எந்த வசதியும் இன்றி பாடசாலை மண்டபங்களில் காய்ந்து கருகிகொண்டிருக்கின்றோம். தயவு செய்து எம்மை எமது சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்ப ஒழுங்கு செய்யுங்கள்" என்று தெரிவிக்கப்பட்ட மகஜர் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட தமிழ் அகதிகள் ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இங்குள்ள பதினைறு பாடசாலைகளில் அகதிகளாகத் தங்கியிருக்கும் கொக்குளாய், கருனாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய், ஆறுமுகத்தான் குளம், முறிப்பு, தென்னமரவாடி, நாயாறு, செம்மலை, அலம்பில், குமிழமுனை, ஆண்டான்குளம் ஆகிய பன்னிரண்டு கிராமங்களிலிருந்தும் குடிபெயர்க்கப்பட்டு பதினைறு பாடசாலைகளில் இருக்கும் 7447 அகதிகள் சார்பில் சுமார் 2500 பேர் கையொப்பமிட்டு இம்மகஜரை அனுப்பியுள்ளனர்.

தமது சொந்த இடத்திலிருந்து இருபது மைல்களுக்கு அப்பாலுள்ள பாடசாலைகளில் தாம் இப்போது வசதியின்றி வசித்து வருவதாகவும் இவர்கள் தமது மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இம் மகஜரின்படி அலம்பில் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களாக 2368 பேர் என்றும், குமுழமுனை கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தவர்கள் 2453 பேர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது...

1-ம் பக்கத் தொடர்ச்சி

தீவிரவாதச் செயல்களால் பிரச்சினைக்கான தீர்வு காண்பது தாமதமாகிச் செல்வதாகக் குறிப்பிட்ட அமைச்சர் தொண்டமான், பேச்சு வார்த்தை பயனுள்ளதாக அமைவதற்கு சாதகமான சூழ நிலை உருவாகும் வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சொன்னார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது. இத்தீர்வு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதாக அமைய வேண்டும்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டுச் சொன்னார் யு.என் ஐ செய்தி நிறுவனத்துக்கு அமைச்சர் இப்பேட்டியினை அளித்தார்.

மட்டுநகர்...

—1-ஆம் பக்கத் தொடர்

தீவில் நடத்திய தேடுதல் வேட்டையில் ஒரு இடத்தில் ரைபிள்கள், கைக்குண்டுகள், வெடிகுண்டுகள், புகைப்படச் சுருள்கள், பண்டேஜ்கள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் படங்கள், டிக்கட் புத்தகங்கள், ரஷ்ய சஞ்சிகைகள் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. எவரும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.

லலித் நேற்று...

—1ம் பக்கத் தொடர்

அத்துலத் முதலி அடுத்த சில தினங்களுக்குள் சிங்கப்பூருக்கு விஜயம் செய்யலாமென்று கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்கப்பூரிலிருந்து நேரடியாக அவர் இந்தியா செல்லலாமென்றும், ஜனதிபதியின் விசேஷ தூதுவராக இந்தியப் பிரதமருடன் இவர் பேச்சு வார்த்தை நடத்தலாமென்றும் தெரிய வந்துள்ளது.

ஒளிபரப்ப...

—1ம் பக்கத் தொடர்

குழுக்கள் ஜனதிபதியை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசியதை ரூபவாஹினி தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் ஒளிபரப்ப விரும்பியதாயினும் அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டது. பிரஜைகள் குழுப் பிரமுகர்கள் இதனை விரும்பாததேஇதற்குக்காரணமெனக் கூறப்பட்டது. ஆனால் புகைப் படங்கள் எடுக்கப்பட்டன

"மாமி"க்கும்...

—1-ம் பக்கத் தொடர்

முன்தினமிரவு மரண தண்டனை வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியில் இவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது. போராட்டப் போராளிகளைக் காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச் சாட்டின் பேரில் அதிதீவிர விசாரணைக்குப் பின்னர் "ரெலி" இயக்கம் மரண தண்டனை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இடமாற்றம் பெற்ற ஆசிரியர் பெயர் விபரங்கள் நேற்றைய மிகுதி

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள 83 ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட 170 ஆசிரியர்களில் 73 பேரின் பெயர்கள் நேற்று பிரசுரமாகின. மிகுதிப் பெயர்கள் இன்று பிரசுரமாகின்றன;-

திருமதி. பத்மினி குணசீலன் (மினுவாங்கொடை) திரு. பி. திலகராஜா (குளியாப்பிட்டி) திருமதி. ஜி. திலகராஜா (குளியாப்பிடடி) திரு. எஸ் சுகுமாரன (குருநாகல்) திரு. எல். கமலநாதன (பொல்காவலை) செல்வி. எஸ். இராசையா (குருநாகல). திரு. எஸ். திருச்செல்வம் (குளியாப்பிட்டி) திரு. கே. இராமநாதன் (குருநாகல்) செல்வி. ஆர். கலாரத்தினம் (மாத்தளை) திரு. கே. மோகனதாஸ் (மாத்தளை) செல்வி. வி ஹேமலதா (அனுராதபுரம) திரு எம். சிறிஸ்கந்தராஜா (அனுராதபுரி) செல்வி. கே. தனலக்ஷ்மி (வததளை) திருமதி. எம். இராசமலர் (கஹவத்தை) திருமதி. எம் திருநாவுக்கரசு (அனுராதபுரி) திரு. ஏ. எஸ். அருள்மநாதன் (பலாங்கொடை) திரு ரி. ஷண்முகலிங்கம் (பலாங்கொடை) திரு பி. நாகரத்தினம் (அனுராதபுரி) திரு. எல். இராமசாமி (நுவரெலியா) திருமதி. எம். சண்முகலிங்கம் (பலாங்கொடை) திருமதி. பி. கிருஷ்ணன (நிவித்திகல) திரு. எஸ். சிங்கராஜா (நிவித்திகல) திரு. வி. எம். முத்துராஜா (பலாங்கொடை) திரு. ஆர். துரைநாயகம் (திருகோணமலை) செல்வி. எம். துரைராஜா (திருமலை) ரூபசமலர் டேவிட் (திருமலை) திருமதி. சாவித்திரி குணரத்தினம் (திருமலை) திரு. ஆ. அனராஜ மணி (திருமலை) திரு. எஸ் வைகுந்தசாமி (திருமலை) திரு எஸ். குணவீரசிங்கம் (கூளிவெட்டி) திருமதி. எல் புஷ்பநாதன (திருமலை) திருமதி வி. பி. தேவராஜ். திருமதி. எஸ். செல்லையா (கம்பஹா) திரு. எஸ் ஆர். மகேந்திரன் (பொலனறுவை) திரு சீ. செல்வநாயகம் (கேகாலை) திருமதி. எஸ். செல்வநாயகம் (எட்டியாந்தோட்டை) செல்வி பி. கனகரத்தினம் (மாவனெல்ல) திருமதி. எம். செல்வதுரை (வஹறக) திரு. கே. ஜெயானந்தன (தெரணியகல) திருமதி. கே. கராளசிங்கம் (எடடியாந்தோட்டை) திருமதி. கே. கே. கயிலைநாதன் (தெஹியோவிற்ற) திரு. எம். பாலேந்திரன் (கேகாலை) திருமதி. ஐ. புவனேஸ்வரி (கொழும்பு) திருமதி எம் சீ. இக்னேசியஸ் (கொழும்பு) திருமதி. எல். சுப்பிரமணியம் (பம்பலப்பிட்டி) திருமதி. ஏ. சண்முகலிங்கம் (இரத்மலானை) திருமதி. ஏ ரி அநுளானந்தன் (கொழும்பு) திருமதி. பி. கணேசன (கொழும்பு) திருமதி. எம். இரத்னவேல (கொழும்பு) திருமதி. அம்பிகை வஜயானந்தன் (கொழும்பு) திருமதி. எம். கனகரத்தினம் (கொழும்பு) திருமதி ஆர். சௌந்தரநாயகம் (கொழும்பு) செல்வி கே. அபபுசகுட்டி (கொழும்பு) திருமதி எம் அரியரதன ராஜா (பம்பலப்பிட்டி) திருமதி. எஸ் நவலோநாதன் (கொழும்பு) திருமதி எஸ். கனகராசா (கொழும்பு) திருமதி. எல். சுந்தரலிங்கம (இரத்மலானை) திருமதி. ஏ. சண்முகலிங்கம் (இரதமலானை) திருமதி. ரி. நித்தியானந்தன் (கொழும்பு) திருமதி. இராஜேஸ்வரி சனசுந்தரம்பிள்ளை (கொழும்பு) திருமதி. ஜி. பி. வேதநாயகம் (கொட்டாஞ்சேனை) திரு. எஸ். இராஜகோபாலபிள்ளை (கொழும்பு) திருமதி பி. சிவஞானகாசன (பம்பலப்பிட்டி) திருமதி. கே. சேனதிராசா (கொழும்பு) திருமதி ராகினி சிறீஸ்கந்தராஜா (கொழும்பு) திருமதி. எஸ். செபக்கலிங்கம் (இரதமலானை) திருமதி. பி. சினனத்தம்பி (கொழும்பு) திருமதி. ரோகினி தியாகலிங்கம் (கொழும்பு) திருமதி என் கந்தசாமி (கொழும்பு) திருமதி எஸ். சுந்தரலிங்கம் (பம்பலப்பிட்டி) திருமதி எல் பதமநாதன (கொழும்பு-13) திருமதி. எஸ். பாலச்சந்திரன் (கொழும்பு-13) திரு பி. தர்மராஜா (கொழும்பு-13) திரு ஜி எஸ். அருமைநாயகம் (ராஜகிரிய) திரு. சீ. அற்புதசிங்கம் (தெகிவளை) திரு எஸ். செல்வராசா (தெமடடக்கொடை) திருமதி. பி. பி. ஞானசுந்தரம் (மாதம்பிட்டி) திருமதி. எஸ் இரத்தினம் (நுகேகொட) திருமதி. ஏ கிருபராஜா (கொழும்பு) திருமதி. கே. சனமுகராசா (நிலாபம்) திரு. கே. பதமநாதன் (தல்கஸ்வெல) திருமதி. எஸ் பத்மநாதன் (எலபிட்டிய) திரு எம். செல்லையா (களுத்துறை) திரு. வீ நடராசா (களுத்துறை) திரு. பி. பாலசுப்பிரமணியம் (கண்டி) திரு. கே. எஸ். அட்சலிங்கம் (அங்கிரிய) திருமதி. எஸ். கணேசமூர்த்தி (களுத்துறை) செலவி எஸ் எம் ரி. இந்திராணி (நுவரஎலியா) செல்வி. எஸ். கௌரி (அக்கரப்பத்தனை) திருமதி சி சரஸ்வதி (அக்கரப்பத்தனை) திருமதி பி. பி. பார்வன் (லிந்துல) திருமதி. கோகிலாதேவி (நுவரஎலியா) திரு எஸ்.மோகனதாஸ் (மாத்தளை) திரு. ஏ. இராஜரத்தினம் (பண்டாரவளை) செல்வி எஸ். கதிரவேலு (கண்டி) திருமதி சீ. சிறீகாந்தா (பதுளை) செல்வி. என். வன்னியசிங்கம் (பதுளை)

ஆசிரிய...

1-ம் பக்கத் தொடர்ச்சி

நியமன நேர்முகப் பரீட்சைகளுக்குச் சமூகமளிக்கமுடியாத தமிழ் விண்ணப்பதாரிகள் இம் மாதம் 21ம் திகதி ஆஜராக சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைக் கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி ஜெயக்குமார் ஈழமுரசுக்குத் தெரிவித்தார். தம்மால் வரமுடியாதிருப்பதாக அறிவிக்காது, குறிப்பிட்ட மூன்று தினங்களில் வராமல் நின்றவர்களும் 21ம் திகதி வரலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

பின்வரும் எட்டு விண்ணப்பதாரிகளையும் 21-ம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு வருமாறும் திரு. ஜெயக்குமார் அறிவித்துள்ளார்:-

திருமதி ஏ மகேஸ்வரி (இணுவில்), செல்வி ஏ, சியாமளா (உரும்பிராய்), செல்வி அனுஷா சிண்ணத்துரை (மானிப்பாய்), திருமதி பி. எலிஸபத் ஜெயசோதி (முல்லைத்தீவு), திருமதி எஸ் நிரஞ்சலா (மானிபபாய்), எஸ். உதயகுமார் (கரவெட்டி), செல்வி ஏ சௌதா (புலோலி), செல்வி ஏ. மங்களேஸ்வரி (வல்வெட்டித்துறை).

ஆடம்பரமின்றி...

—1-ம் பக்கத் தொடர்

பொங்கல் தினத்தை அனுட்டிக்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றுள்ள சூழ்நிலையில் ஆண்டவன் அருள் வேண்டி அனைத்து தமிழர்களும் பிரார்த்தனையில் ஈடுபடுவது முழு முதற் கடமையாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உழவனின் உழைப்பிற்கான வெற்றித் திருநாளாக தைப் பொங்கல் திருநாள் அமைவது போல் அனைத்து தமிழ் மக்களின் பங்களிப்பின் பயனால் ஒரு வெற்றித் திருநாள் விரைவில் தோன்றும் என்ற நம்பிக்கையோடு நாம் செயற்படுவோம் என்றும் திரு ஆலாலசுந்தரம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்...

1-ம் பக்கத் தொடர்

பிரஜைகளைக் காப்பாற்ற ஜனதிபதி ஜெயவர்த்தனே தமது இயலாமையைத் தெரிவித்துவிட்டார் என்று சொன்னார்.

கடந்த நான்கு மாதங்களில் எழுநூறுக்கும் அதிகமான தமிழர் இங்கு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், எண்ணூறுக்குமதிகமான இளைஞர்கள் விசாரணை எதுவுமின்றி காலியிலுள்ள பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததோடு. யாழ்ப்பாணத்திலும் இரண்டு முகாம்களில் இவ்வாறு பலர் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணமே இப்போது ஒரு சிறைச்சாலையாக மாறி வருவதாகக் குறிப்பிட்ட சிவசிதம்பரம் முல்லைத்தீவுப் பகுதியில் இருபதாயிரம் தமிழர்கள் தமது சொந்த வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதே வேளையில் அகில இந்திய மாணவர் அணி நேற்று முன்தினம் ஈழத்தமிழர் படுகொலைகளைக் கண்டித்து புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொங்கலுக்குப்...

—1- ஆம் பக்கத் தொடர்

15ம் திகதிக்குப் பின்னர் தற்போதைய சட்ட விதிகளில் பல தளர்த்தப்படலாம் எனவும் அவர் மேலும் சொன்னார்.

கல்வியங்காடு...

—1ம் பக்கத் தொடர்

வீட்டுக்கு முன்னால் நின்ற இளைஞர் ஒருவர் தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரியவந்துள்ளது.

தைப்பொங்கலுக்கு சாமான் வாங்க வந்தவர்களும், எரிபொருள் விற்பனை நிலையமொன்றில் மண்ணெண்ணெய் வாங்க நின்ற பெருந்தொகையானவர்களும் படை வீரர்களைக் கண்டதும் நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

ஸ்தலத்தில் வைத்து விசாரிக்கப்பட்ட பலர் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

வரி விளம்பரம்

வாங்கவும் விற்கவும்

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம் பொதுச்சந்தை கோப்பாய்.

ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 13-1-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது